

குளச்சல் ஊர் மற்றும் அதை சார்ந்த கிராமங்களில் உள்ள சுமார் 50 ஆயிரம் மக்களின் நீண்டகால கோரிக்கையான குளச்சல் மீன்பிடித் துறைமுகம் விரிவாக்கம் செய்வதற்காக 350 கோடி ரூபாய்க்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கான நிதியினை நபார்டு ( NABARD) வங்கி மூலம் பெறுவதற்கான ஆக்கப்பூர்வமான முயற்சிகள் நடைபெற்று கொண்டிருப்பதற்கு நாடாளுமன்றக் கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களை, மாநில மீனவரணி செயலாளர் ஏ. ஜோசப் ஸ்டாலின் தலைமையில் அருட்பணி Fr டங்ன்ஸடன் ( CPD director கோட்டாறு மறை மாவட்டம் ஆயர் அலுவலகம்), அருட்பணி Fr ஜெகன். சா ( குளச்சல் ஊர் பங்குதந்தை), Capt ஜான்சன். M.C.( செயலாளர், குமரி மாவட்ட விசைப்படகு மீன்பிடிப்போர் நலசங்கம்) வர்க்கீஸ் ( தலைவர்), ஜஸ்டின் (பொருளாளர்), ஆன்றனி ( துணைத்தலைவர்) பிராங்கிளின் (முன்னாள் செயலாளர்) ஆகியோர் நேரில் சந்தித்து தங்களின் நன்றியைத் தெரிவித்தனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேற்கு சட்டமன்றத் தொகுதி, பெத்தானியாபுரம் பகுதி, மாநகராட்சி 20வது வார்டுக்குட்பட்ட விளாங்குடியில் வசித்து வரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி கட்சி பாகுபாடின்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் தனச்செல்வம்,மதி வெங்கடேஷ், தனசேகர், சிறைச்செல்வன், இளைஞர் அணி வெற்றிச்செல்வன், ஐயப்பன், அன்புச் செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கழகத்தினர் மற்றும் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



குளச்சல் ஊர் மற்றும் அதை சார்ந்த கிராமங்களில் உள்ள சுமார் 50 ஆயிரம் மக்களின் நீண்டகால கோரிக்கையான குளச்சல் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்வதற்காக 350 கோடி ரூபாய்க்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கான நிதியினை நபார்டு (NABARD) வங்கி மூலம் பெறுவதற்கான ஆக்கப்பூர்வமான முயற்சிகள் நடைபெற்று கொண்டிருப்பதற்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுவையும், மீன்வளம் – மீனவர் நலத் துறை அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணானையும், மாநில மீனவரணி செயலாளர் ஏ. ஜோசப் ஸ்டாலின் தலைமையில் அருட்பணி Fr டங்ன்ஸடன் ( CPD director கோட்டாறு மறை மாவட்டம் ஆயர் அலுவலகம்), அருட்பணி Fr ஜெகன். சா ( குளச்சல் ஊர் பங்குதந்தை), Capt ஜான்சன். M.C.( செயலாளர், குமரி மாவட்ட விசைப்படகு மீன்பிடிப்போர் நலசங்கம்) வர்க்கீஸ் ( தலைவர்), ஜஸ்டின் (பொருளாளர்), ஆன்றனி ( துணைத்தலைவர்) பிராங்கிளின் (முன்னாள் செயலாளர்) ஆகியோர் நேரில் சந்தித்து தங்களின் நன்றியைத் தெரிவித்தனர்.

### இன்று (24ம்தேதி) சிவகங்கை நகர் கழக தொண்டரணி அமைப்பாளர்

# பூக்கடை கிட்டு இல்ல திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

சிவகங்கை, ஆக. 24-

சிவகங்கை நகர் கழக தொண்டரணி அமைப்பாளர் வீ.கிருஷ்ணன் என்ற பூக்கடை கிட்டு.இவரது மகள் சௌந்தர்யாவிற்கும் பெரம்பலூர் காரைக்கயிலையைச் சேர்ந்த பி. ரிதன் ஆகியோர் திருமணம் இம்மாதம் 21ஆம் தேதி பெரம்பலூரில் நடைபெற்றது. அதை தொடர்ந்து மணமக்களுக்கான வரவேற்பு விழா இன்று (24 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் சிவகங்கை சேதுபதி மகாலில் நடைபெற உள்ளது. மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் வரவேற்பு விழா நடைபெறுகிறது. மாவட்டக் கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள். மணமக்களை பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள், சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் வாழ்த்தி பேசுகிறார்கள். திருமண வரவேற்பு ஏற்பாடுகளை சிவகங்கை நகர் கழக தொண்டரணி அமைப்பாளர் பூக்கடை கிட்டு திருமதி கே.ராமேஸ்வரி, கே.கோகுல் குமார்,கே.ஆர்.சஷ்வந்திகா, கே.ஆர்.சஸ்வந்த் கோகுல் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

### முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஆத்தூர் கிழக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



காட்டுப்புத்தூர் பேரூர்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



எடப்பாடி நகரம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



சாத்தூர் நகரம்,
விருதுநகர் தெற்கு மாவட்டம்.



பாலக்கோடு மேற்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



மானாமதுரை மேற்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.



பல்லாவரம் தெற்குப் பகுதி,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.